මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2025/65** **2025.04.22**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
## அஞ்சல் வாக்கு தகவல்களைத் தேடுவதற்கான இ-சேவை

அஞ்சல் வாக்காளர்கள் வாக்களிப்பதற்குரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலரும் வாக்களிக்கவுள்ள நிலையமும் பற்றிய தகவல்களையும் மிக இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான புதிய இ-சேவையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதிலுள்ள "KYC" (உங்கள வேட்பாளரை அறிந்துகொள்ளுங்கள்) மூலம் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள கட்சிகளதும்/குழுக்களதும் வேட்பாளர்களதும் தகவல்களையும் மிகவும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும்.

https://eservices.elections.gov.lk இணையிணைப்பி ஊடாக தேர்தல் இ-சேவையில் சஞ்சரித்து அதிலுள்ள **'அரச அதிகாரிகளுக்கு'** என்ற இணையிணைப்பியினுள் பிரவேசித்து **'அஞ்சல் வாக்கு தகவல்கள்'** என்ற இ-சேவையில் பிரவேசித்து இத்தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறன்றேல் ec.lk/pvd என்ற இடையிணைப்பியின் மூலம் அல்லது பின்வரும் QR குறியீட்டை ஸ்கான் செய்வதன் மூலம் இலகுவாக உட்பிரவேசிக்க முடியும்.

தேர்தல் இ-சேவை கணக்கைப் பயன்படுத்துவதற்கு ஏற்கனவே கணக்கொன்றை ஆரம்பித்திருக்காவிடில், Create New Account (Sign Up) என்பதன் மூலம் மிகவும் இலகுவாக கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்